REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 2¼
ஆறுமாத சந்தா	...	ரூ. 1¼

தனிப்பிரதி முக்காலணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு
தனி சார்ஜ்.

பு-26 | கும்பகோணம் விக்ரம-ஹூ மார்கழி-மீ 19உ 1941-ஹூ ஜனவரி-மீ 2உ | ஸ-1

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

ஸ்ரீபால மீனும்பிகை லக்ஷார்ச்சனை!! மதுரை பிரும்மஸ்ரீ தர்மராஜ நடேசய்யரவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ பால மீனும்பிகைக்கு தர்ம விருத்திக்காக ஷை வைபவம் நடக்கிறது. மஹன்யாஸ பூர்வமான, அபிஷேகமும், மாலைகளில் அரிய உபன்யாஸங்களும் கச்சேரிகளும் நடக்கின்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து குவிகின்றனர்.

ஊர்வலச்சிறப்பு!! வேகவதி நதியிலிருந்து 11 வெள்ளிக்குடங்களில் திருமஞ்ஜன தீர்த்தம் பாண்டு வாத்யத்துடன் ப்ரதிதினம் 2 மைலுக்கு குறையாமல் பல வீதிகள் வழியாக ஊர்வலம் வருகிறது. வெள்ளியன்று குருவாயூர் கண்ணனை விமானத்திலருளச் செய்து, வேதபாராயணம், பஜனை கோஷ்டி பெண்கள் பஜனை வாத்ய கோஷங்களுடன் தலைவருடன் பல வீதிகள் வழியாக ஊர்வலம் வந்தது. தீபாராதனையுடன் பாராயணகாரருக்கு கற்கண்டுபுஷ்பமளிக்கப்பட்டன. தலைவருக்கு பலர்மாலையிட்டனர். சிறுமிகளின்ஸநாதன தர்மத்திற்கு "ஜே" என்னும் கோஷம் வானைப்பிளந்தது.

உபன்யாஸங்கள்!! பல வித்வன்மணிகள் அதிரஸமாக உபன்யஸித்தனர். ஒலி பரப்பு வைக்கப்பட்டிருக்கிறது. விசாலமான பந்தலில் பல்லாயிரம் பேர்களும் வெளியில் பல்லாயிரம் பேர்களும் கேட்டு ஆநந்தித்தனர். ப்ரதிதினமும் பதிணெண் புராண ப்ரவசனமும் நடைபெறுகிறது.

நமது முடி சூடா மன்னர்!! பலர் பல வகையில் தர்மத்தைக் கொள்ளை கொள்ளும் போது, அதிலும் இச்சமயம் பல அதர்ம ஸபைகள் கூடும் போது தர்மத்தை நிலைநாட்ட தனது உடல் பொருளாவி அனைத்தையும் தர்மார்ப்பணம் செய்தவர் ம-ா-ா-ஸ்ரீ ராவ்ஸாஹிப் நடேசய்யரவர்களது செல்வாக்கை கவனிக்கும் போது முடிசூடா மன்னரென்றே கூறுவாம்!

மித்யாடம்பரம்!! ஹிந்து மகாஸபை மதுரையில் கங்கா தீர்த்தங்கள் கொண்டுவருவதாக படாடோபம் செய்து ஜலத்தை யானைமீது எடுத்து ஊர்வலம் தடபுடலாக நடத்தி நம் தலைவர் ஒத்துழைப்பை இழந்தனர். ஸாவர்க்கர் பரமத்யாகி. ஆனுல் ஹிந்து வைதிக ஆசாரமில்லாதவர்.

6. பல அதர்ம ஸபைகள் !! ஆர்ய ஸமாஜி விதவா விவாஹ கூட்டம் யுவசபை அத்வைத பிரகடந ஸபை? முதலிய ஸபைகள் வர்ணுச்ரமத்தை வாயில் வந்தபடி வைய்து தர்மவிரோதமான பலதீர்மாநங்களைச் செய்து மகிழ்ந்தன.

சண்டைக்கு ஆரம்பம்!! இதுவரை தென்னுட்டிலும் விசேஷமாக மதுரையிலும் ஹிந்து முஸ்லீம் சண்டை கிடையாது. [illegible] வுடன் முஸ்லீம் கோஷ்டி தலை தூக்க ஆரம்பிக்கிறது!!

மதுரை மாதர்மதி!! ஆஸ்திக மாதர்கள் குலதர்ம, ஜாதி தர்ம, ஸ்திரீ தர்மத்தைக் கைவிடாமல் செய்யும் மததர்மப்ரசாரம் செய்யும் வகை மிகமிகக் கொண்டாடத்தக்கதாயிருக்கிறது. ஆர்யதர்மத்தில் அக்கறை கொண்டு பேசியது வற்புறுத்தியது மிக அழகாக இருந்தது.

சாஸ்திரிகள் குதித்துவிட்டார்!! ஸ்ரீமான் K S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் மதில்மேல் பூனை போல் எந்த கக்ஷியிலும் சேராமலும் சேராமலிராமலுமிருந்தார். கடைசியாக ஹிந்துஸபையில் குதித்து விட்டார்.

ஸ்ரீ பாகவதமும் ராமாயணமும்!! திரிசிரபுரமெனும் திருச்சியில் ஸ்ரீபாகவதப்ரவிண ஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் ஸ்ரீபாகவதத்தையும், ஸ்ரீமதப்பய்யர் தீக்ஷிதர்வாள் வம்சத்தில் பிறந்து ஸாமத்தின் கரைகண்டு ஸாமவேத பூர்வாபரப் பிரயோகத்தை வெளியிட்ட பிரும்மஸ்ரீ சாமி சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீமத் ராமாயணத்தையும் கூறி ஆஸ்திகர்களுக்கு கர்ணுமிருதத்தையும் நாஸ்திகருக்கு நல்லறிவையும் புகட்டுகிறுர்கள்!!

திப்பிராஜபுரம்

ஸ்ரீ பிரும்ம வித்யா ஸபா:—7—12—40 சனிக்கிழமை ஸ்ரீ வரகூர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் கும்பாபிஷேகமும் அதனுல் உலகத்திற்கு எப்படி க்ஷேமம் ஏற்படுகிறது என்பதைப் பற்றி உபந்யஸித்தார்கள் 10—12—40உ (ஏகாதசி) செவ்வாய்கிழமை ஷியார் அவர்கள் மனிதனின் கடமை என்பதைப்பற்றி உபன்யஸித்தார்கள்.

14—12—40உ சனிக்கிழமை கோடக நல்லூர்பதிகள் சிவ ரஹஸ்யத்திலிருந்து. 'ஸம்ஸாரதூஷணம்" என்பதைப் பற்றி ச்லோகபூர்வமாகச் சொல்லிகொஞ்சம் தமிழில் தெளிவு படுத்தி உபன்யஸித்தார்கள்

21-12-40உ சனிக்கிழமை வரகூர் ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள் ப்ருஹதாரண்யத்திலுள்ள உபகோசலருக்கு அக்னியானது கருணையினுல் ப்ரும்மத்தை உபதேசித்த ஆக்கியானத்தைச் சொல்லி [illegible] கரித்து வரும் ஸ்ரீ ஆசார்யாளின் முத்திராதிகாரி ஸ்கீமின்' பெருந்தன்மையும் பரந்த நோக்கமும் எப்படிக் கொண்டது என்று உருக்கமாகச் சொன்னுர்கள்.

25—12—40உ புதன்கிழமை நாச்சியார் கோவில் கி. சட்டனுத பட்டாசாரியார் அவர்கள் "வைகானஸம்" என்பது கிருஷ்ணயஜுர் வேதத்தை ஒட்டின ஆறு சூத்திரங்களில் ஒன்று என்றும் பரமவைதிகமென்றும் அதை செழித்து ஓங்குமாறு செய்ய வேண்டுமென்றும் சொன்னுர்கள். ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளும் முடிவுரையாக 'ஈச்வரா! காப்பாற்றவேணும்' என்று சொல்லுகிற நம்முடைய ப்ரார்த்தனையானது பரிபாலன மூர்த்தியான விஷ்ணுவுக்குத்தான் எப்படி பொருந்தும் என்றும் வர்த்தமான காலத்திலிருக்கிற நமக்கு சிருஷ்டிகர்த்தாவான ப்ரும்மாவையும் ஸம்ஹார கிருத்தியத்தை கையாளுகிற பரமசிவனென்ன இருவர்களும் அவ்வளவு தேவையில்லை என்றும் ச்லேஷையாகச் சொன்னுர்கள்.

28—12—40உ (ஹனுமத்ஜயந்தி) சனிக்கிழமை உள்ளூர் கதாப்ரவீணக ஸ்ரீ சாம்பசிவ சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ ஹனுமாருடைய ஜனனம், ப்ரபாவம், பலம், அது எப்படி தனக்குத் தெரியாமல் போயிற்று, பாரதத்திலுள்ள பீமசேன ஆஞ்சநேய ஸம்வாதம் இதுகளை விஸ்தாரமாக தனது இனியசரீர ஸம்பத்துடன் வெகு அழகாகச் சொன்னுர். ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகளும், ச்ரௌதிகளும் சில சொற்பொழிவு எய்தினுர்கள். பிறகு ஆஞ்சநேய படத்துக்கு விசேஷ பூஜை நிவேதனங்கள் செய்யப்பட்டு ஸபையோர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. ந-கி

திருவாதி
அரசர் கல்லூரியின் நிலைமை

திருவையாற்றில் அரசர் கல்லூரி என்ற பெயருடன் ஒருகல்லூரி இருப்பதும் இங்கு வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிகளும் நிரம்பட்ட ஆசிரியர்களைக்கொண்டு கற்பிக்கப்பட்டு வருகின்றது என்றும் பல்வேறு வருணத்தார்கள் கல்வி பயில்கின்றனர் என்பதும் யாவரும் அறிந்த விஷயம்.

தற்பொழுது இங்கு பொருள் நெருக்கடி தவிர்க்க, இக்கல்லூரியை மேற்பார்த்து வரும் தஞ்சை ஜில்லாபோர்டில் வழிகண்டு பிடித்திருக்கின்றனர். அல்லாமலும் தஞ்சை ஜில்லாபோர்டின் நிர்வாகத்திற்குட் பட்ட போர்டிங்குகளில் சாதி வேறுபாடின்றி நடத்தல்வேண்டும் என்பதையும் தீர்மானித்திருக்கின்றனர். எனவே,

இங்கு விவரிக்கவேண்டிய விஷயங்கள் மூன்று:—

1. கல்லூரித்தலைவரின் சம்பளத்தைக் குறைத்தல்,
2. ஸாஹித்ய வகுப்புகளை எடுத்தலும் இரு ஆசிரியர்களை நீக்கல்,
3. சாதி வேறுபாடின்றி சாப்பாடு நடத்துதல்.

ஆகவே முதலாவதை எடுத்துக்கொள்வோம். தற்பொழுது இங்கு இருக்கும் கல்லூரித்தலைவர் இல்லாது வேறொருவர் தலைவராக இருப்பரேல் கட்சிச்சண்டை, மதச்சண்டை, ஜாதிச்சண்டை, மொழிச்சண்டை முதலிய எல்லாச் சண்டைகளும் ஒருங்கு ஏற்பட்டுத்தலை விரித்தாடி, கல்லூரி [illegible] நிலவும்.

கல்லூரித்தலைவர் எத்தன்மையானவர்? பல்வேறு மாணவர்களையும் அன்பால் பிணித்து இன்சொல்லால் அழைத்துப் போதிக்கும் ஆற்றல் உள்ளவர். பல்வேறு மொழிகளாகிய ஆங்கிலம், தமிழ், வடமொழி, ஜர்மனி, கன்னடம் முதலான மொழிகளில் நல்ல பாண்டித்யம் பெற்றவர். சென்னை மாகாண கல்வி ஸ்தாபனம், அண்ணாமலை கல்வி ஸ்தாபனம் முதலியவற்றுக்கு நெருங்கிய தொடர்புடையவர். ஏட்டுக்கல்வியுடன் மட்டுமின்றி உலகியல் கல்வியுடன் திகழ்பவர். மொழியாராய்ச்சியிலோ மேல்நாட்டறிஞர்கள் பலரால் புகழப்பட்டுத்திகழ்பவர் இவ்வளவு தன்மையாரான ஒரு கல்வியாளரைத் தலைவராகக் கொண்டிருப்பது கல்லூரிக்கும் தஞ்சை ஜில்லாபோர்டுக்கும் ஒரு பெருமையல்லவா? அத்தன்மையான பெருமையாளர் இங்குவரும்பொழுது கொடுத்து வந்த சம்பளத்திலிருந்து படிப்படியாகக் குறைத்து வந்து இப்பொழுது சொற்ப ஊதியமே பெறுகின்றனர். இத்துடன் நிற்காமல் இன்னும் குறைத்தால் அது ஒரு கௌரவமாகுமா? பண நெருக்கடியைத் தவிர்க்க வேறு மார்க்கம் இல்லையா?

இரண்டாவது, ஸாஹித்ய வகுப்பை எடுத்தல். இதுவும் தகாதகாரியமே. சென்னை மாகாணத்தில் நடந்துவரும் சம்ஸ்கிருத பாடசாலைகளில் உள்ள சாஹித்ய மாணவர் எண்ணிக்கையைக் காட்டிலும் இங்குஅதிகமாகவே இருக்கின்றது. ஆகையால் அதை எடுக்கக்காரணம் விளங்கவில்லை. ஒரு கல்லூரியின் ஒரு புது வகுப்பை எடுப்பதைக் காட்டிலும் வைப்பது எவ்வளவு கஷ்டமான காரியம் தெரியுமா? ஆசிரியர்களை எடுத்தல் வருத்தும் தன்மையதே. புதிதாக ஆசிரியர்களை நியமித்தல் போர்டுக்குப்பெருமையே யன்றி எடுத்தல் பெருமையல்ல. எடுக்க இருக்கும் ஆசிரியர் இனி எதிர்காலத்தில் எங்ஙனம் தத்தம்வாழ்க்கையை நடத்துவார்என்று போர்டார் எதிர்பார்க்கின்றனர்? கள்ளுக்கடைகளை யெடுத்தவுடன் காங்கிரஸ் சர்க்கார் கலால் இன்ஸ்பெக்டருக்கு வேறு உத்யோகம் கொடுத்து ஆதரித்ததுபோலவே இவ்வாசிரியர்களை பராமரிக்க வேண்டாமா? அவர்கள் வேற்றுநாட்டவரா? பென்சில்சீவக் கத்தியைக் கொடுத்தால் கையை நறுக்கிக்கொள்வதுபோல் உரிமையை போர்டார் தர்மமார்க்கமல்லாத வழியில் உபயோகிக்கலாமா?

சனாதனிகளுக்குச்சோதனை காலம்!!

இது ஒருபுறம் நிற்க, இவைகளுக்குக் காட்டிலும மனம் புண்படுத்தக் கூடிய விஷயம் போர்டிங்கில் சாதிமத வேறுபாடின்றி ஒருங்குச்சாப்பிடச் செய்தல்.

இது ஒரு கண்டிக்கத்தக்க செய்கையாகும். முதல் முதல் இக்கல்லூரியில் சாஸ்திரங்கள் மட்டுமே கற்பிக்கப்பட்டு ஆஸ்திகப்மாக இருந்தது. பின்னர் தமிழ்வந்தது பின்னர் பல வருணத்தாரும் வந்து பயில ஆரம்பித்தனர். எல்லாம்பழயன கழிதலும் புதியன புகுதவழுவல காலவகையனே என்றிருக்க நேரிட்டது. இப்பொழுது செய்திருக்கும் தீர்மானம் பொறுக்கமாட்டாதவாறு இருக்கின்றது. இத்தீர்மானம் காங்கிரஸ் போர்டு என்ற காரணத்தால் வந்தது என்ற கூறவேண்டும். சேர்ந்து உட்காருவது சாப்பிடுவது என்பது முதலில் மனிதர்களின் மனதில் ஏற்படல் வேண்டும். கல்லூரி மாணவர்களின் மனதில் தீர்மானிக்க ஏற்பாடுவேண்டும். மாணவர்களின் சம்மதத்தைக்கேட்டதாகவும் தெரியவில்லை. சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டால் சுயராஜ்யம் வந்து விடுமா?

இங்ஙனம் மாணவர்களின் மனப்பூர்வகமான சம்மதத்தைக்கேட்காது சேர்ந்து சாப்பிடுதல் வேண்டும என்று நிர்ப்பந்திப்பது காங்கிரஸ் தலைவர் காந்திக்குத்தான் சம்மதமா? அவர் ஒருநாளும்ஒப்புக்கொள்ள மாட்டார். ஏதோ விளையாட்டாகத் தீர்மானித்து விட்டனர். சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லியவண்ணம் செய்தல் என்பதை அறியட்டும்.

ஆகவே கல்லூரி மாணவர்களில் பலர் ஸ்ரீஜத் சங்கராசாரியாரின் சீடர்களாகவும், பலர் மத்வ மடத்தைச்சார்ந்தவர்களாகவும் பலர் அஹோபில மடத்தைச்சார்ந்தவர்களாகவும், சிலர் தாத்தாசாரியர் குடும்பத்தினர்களாகவும் இருக்கின்றனர். எல்லா மடாதிபதிகளும் சநாதனிகளும் அங்கங்கே கூட்டம் போட்டு கண்டனம்தெரிவித்து ஆவன செய்தல் வேண்டும். இதுவிஷயமாகத திருவையாறு சென்னை வக்கீல்களும் சநாதனிகளின் வரப்பிரசாதி மதுரை ராவ்சாகேப் நடேசய்யர் அவர்களும் தக்க முயற்சி எடுத்துக்கொள்வதுடன் கல்லூரியில்படித்து வெளியேறிய பழய மாணவர் பலரும் தீவிர சிரத்தை எடுத்துக்கொண்டுக் கல்லூரியின் விடுமுறை நாட்களாகிய இன்னும் ஒருமாதத்திற்குள் ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சத்திரம் இலாகாவில் இக்கல்லூரி சம்பந்தமாகப் பண நெருக்கடியைச் சமாளிக்க சில முன்யோசனைகளும் குறிப்புகளும்.

1. சத்திரம் இலாக்காக்களில் உள்ள சிப்பந்திகளைக் குறைத்தல்
2. கல்லூரியில் சேர்க்கப்படும் போர்டர்களின் எண்ணிக்கையைக்குறைத்துக்குறைந்தபையன்களையே சேர்த்தல். எந்தெந்தஜில்லாவிலிருந்து பையன்கள் வருகின்றனரோ அங்கங்கு உள்ள போர்டிலிருந்து போர்டிங் சிலவை பெற்றுபோர்டிங் நடத்துதல்.
3. தற்போது மூன்று வேளைகளில் மோரும் சாதமும் மட்டும் கொடுத்தும் ஒரு வேளையில் பெரும்பாலான மாணவர்கள் சாப்பிடுவதில்லை. ஆகையால் அந்த வேளையினையே எடுக்கலாம்.
4. குழம்பு, ரசத்தை ஒன்றுபடுத்தலாம்
5. மிகவும் நெருக்கடியை முன்னிட்டு வேண்டுமானல் ஸ்மார்த்தக் கட்டையும் வைஷ்ணவ சாப்பாட்டுக்கட்டையும ஒன்றுபடுத்தலாம்.

மேற்கூறியவாறு செய்தால் யாவர்க்கும் அதிக இடையூரு விளைவிக்கா. போர்டார் "சாதி பேதமின்றி போர்டிங் நடத்துதல்" என்ற தீர்மானத்தை மட்டும் தள்ளிவிட்டு பிற வழிகளில் எல்லாம் கல்லூரியை முன்னேற்றமடையச் செய்யவேண்டும் இன்னும் பொதுஜனங்களின் மனம் புண்படாதவாறு நடந்துகொள்ளவேண்டும் என்றும் சாஸ்திரங்களை முழுக்கவும் ஒதுக்கித் தள்ளக்கூடாது என்றும் ஸ்ரீஜத் சங்கராசாரியாரும் உத்தரவு கொடுத்தால்செய்யட்டும் என்றும் மிகவும் தாழ்ந்து கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பழைய மாணவன்

ஏகாதசி உபன்யாஸம்
திருவிசலூர்

ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள் ஆக்ஞையை முன்னிட்டு, நாளது மார்கழி மீ 11உ (25—12—40) புதன் கிழமை மத்யானம் 3 மணிக்கு மேல் இவ்வூர் ஸ்ரீதர வேங்கடேச அய்யாவாள் ஸன்னதியில் "நாமகீர்த்தன மஹிமை" என்பது பற்றி ¾ மணி நேரம், முத்ராதிகாரி ஆயுர்வேத வைத்யர் ஸ்ரீ T. V. சுப்பிரமணியய்யரால்ஓர் உபன்யாஸமும், அதன்பிறகு வித்வான்ஸ்ரீ T. S. வைத்யநாத சாஸ்திரிகளவர்களவர்களால் 2½ மணி நேரம் "ஸ்ரீதர அய்யாவாள்" சரித்திரத்தைப்பற்றி ஓர் உபன்யாஸமும் நடைபெற்றன.

ந. நி.

பாகவத பக்ஷாஹ உபன்யாஸம்

பொன்மலை F. 29/1 என்றும் கட்டிடத்தில் ஆஸ்திகர்களால் மார்கழி மாஸத்தில் ஸத்கதா காலக்ஷேபம் செய்யவேணுமென்பதையுத்தேசித்து தற்காலம் திப்பிருஜபுரத்தில் வசிக்கும் ஆடுதுறை பெருமாள் கோவில் ப்ருமமஸ்ரீ லக்ஷ்மீகாந்த சர்மா அவர்களால் ஸ்ரீமத் பாகவதத்தை 15 தினங்களில் சங்க்ரஹமாக உபன்யாஸம் செய்ய ஏற்பாடாகி நடந்து வருகிறது.

நமது நிருபர்.

ஸ்ரீ பிரஹ்ம வித்யா விமர்சனீ
பிரசுரங்கள்.

ஸ்ரீ நகர விமர்சமும் ஸ்ரீ லலிதாஸ்தவ ரத்னமும்	0—12—0
ஸ்ரீ குரு தத்வ விமர்சம்	0—5—0
ஸ்ரீ வரிவஸ்யா ரஹஸ்யம்	1—0—0
ஸ்ரீ வித்யா ஸபர்யா பத்ததி	2—0—0
ஸ்ரீ வித்யா ஸபர்யா வாஸனை	3—0—0
ஸுப்ரஹ்மண்ய தத்வம்	1—8—0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

இப்போது நாம் செய்ய வேண்டியதென்ன?

ஸம்ஸ்கிருத பாஷாப்யாஸம்

(ஆத்மவித்யா பூஷணம் V. ஜகதீச்வர சாஸ்திரிகள்)

நமது தேசம் புராதன ஸ்திதியிலில்லாமல் புதிய, புதிய மாறுதல்களை அடைந்து விட்டது அதனால் தேசம் ஸுபிக்ஷமாயில்லை. எல்லாவிதத்திலும் க்ஷீண கதியை அடைந்து விட்டது. நம்தேச துர்தெசையை என்னைப் போல், வெகு பேர்கள் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போக்குவதற்கு பல ப்ரயத்னங்களும் குறைவின்றி நடத்தி வருகிறார்கள். ஆனால் அவை பிரயோஜனபபடாமலிருக்கின்றன. தேசத்தில் சங்கத்திற்குக் குறைவே கிடையாது. ஒவ்வொரு சங்கமும் தேச ஹிதத்துக்குப் பாடுபடுவதாகவே சொல்லிக்கொள்கிறது. சங்கங்கள் விருத்தியாக ஆக, தேசம் மிகுந்த துர்தசைக்குள்ளாகி தாரித்ரியம் முதலியவற்றால் கஷ்டப்படுகிறது. இதனால் சங்கங்கள் யாவும் சரியான வழியில் பிரவிர்த்திக்கவில்லையென்பது நிச்சயம். சரியான மார்க்கம் புலப்படாமலிருப்பதற்கு ஸ்வபுத்தியையே முக்ய பிரமாணமாக நம்பி அதை குரங்குப்பிடியாய் விடாமல் பிடித்துக் கொண்டு வேத சாஸ்திரங்களை அலக்ஷ்யம் பண்ணுவதுதான் காரணம். சாஸ்திரங்களில் தேச சுபிக்ஷதிற்குச் சொல்லிய காரணங்களைக் கவனித்தும் கவனியாமலிருக்கின்றன. நமது ஸௌக்யமெல்லாம் சாஸ்திரங்களில் அடங்கியிருக்கிறது. வியாதியின் காரணத்தையறிந்து அதற்குத் தகுந்த மருந்து கொடுத்தால் வியாதி நிவர்த்தியாவதுபோல், துர்பிக்ஷகாரணத்தைத் தெரிந்து கொண்டு அதைப்போக்கத்தக்க மார்க்கத்தையல்லவா அவலம்பிக்கவேண்டும்? இப்போது சங்கங்களெல்லாம் துர்பிக்ஷ காரணத்தைக் கண்டு கொள்ளவில்லை, கண்டிருப்பதாகமட்டிலும் அஹங்காரத்தால் நினைத்து வருகின்றன.

மதம் விருத்தியடைந்திருந்த காலத்தில் தேசம் ஸுபிக்ஷமாயிருந்தது. இப்போது மதமானது துர்பிக்ஷத்திலிருப்பதால் அதுதான் தேச துர்பிக்ஷத்துக்குக் காரணமாயிருத்தல் தகும். ஆகவே மத விஷயத்தில் துர்பிக்ஷத்வத்தைத் தான் முதலில் துலைக்க வேண்டும். இதை யன்றி வேறு வழியால் ஸ்வராஜ்யத்தை யடைந்து, தேசஸுபிக்ஷத்தை ஏற்படுத்தி விடலாமென்று நினைப்பது சரியாகாது.

ஸ்ரீ வியாஸ பகவானே, மததத்வத்தை எளிதில் தெரிந்துகொள்ள முடியாதென்று சொல்லியிருக்கையில், இப்போதுள்ளவர்களுக்கு மதத்தவம் எப்படி கண்டுபிடிக்க முடியும்? இப்போது மதத்தை வேப்பங் காயைப்போல் எல்லோரும் வெறுக்கின்றார்கள். பித்தத்தால் சர்க்கரை கசப்பாய் தோன்றினால், அது சர்க்கரையின் தோஷமாகாது நாக்கு தோஷந்தான் காரணம். தன் புத்தியின் தோஷத்தால் மத வெறுப்பு ஏற்பட்டிருக்கின்றதே யொழிய, மதம் வெறுக்கக்கூடிய ஸ்வபாவத்திலில்லை.

மத நம்பிக்கையழிந்து விட்டதற்கு மூல காரணம், மதத்தையறிவிக்கின்ற சாஸ்திரங்களைப் படிக்காமலிருப்பதேயாகும். மறுபடியும் மத நம்பிக்கை நம்மிடம் தோன்றுவதற்கு சாஸ்த்ராப்யாஸம் செய்யவேண்டியது வெகு முக்யம். நமது மத க்ரந்தங்கள் யாவும் ஸம்ஸ்கிருத பாஷையிலிருப்பதால் ஸம்ஸ்கிருத பாஷையை நாடெங்கும் பரவச் செய்தல் வெகு வெகு முக்யம். தர்ஜமாக்கள் மூலமாய் சரியானபடி சாஸ்திர க்ஞானம் உண்டாவது வெகு கடினம். ஸம்ஸ்கிருத பாஷாப்யாஸ மூலமாய் சாஸ்திரக்ஞானம் ஏற்படுவதற்கும், தர்ஜமாக்கள் மூலமாய் உண்டாவதற்கும் மிக வித்யாஸமுண்டு.

ஸம்ஸ்கிருத பாஷை விருத்தியடைந்தால் அவ்யவ ஸ்தாவாதம் எல்லாம் அடங்கிவிடும். ஆங்கில பஷாபிவிருத்தியால் ஸம்ஸ்கிருத பாஷாப்யாஸம் நம்மிடம் குன்றிவிட்டது. ஆங்கில பாஷையில் வ்யாமோஹம் தொலைந்தால் தான் தேசம் ஸுபிக்ஷமாயிருக்கும். இப்போதுள்ளநிலைமையில் அந்த வ்யாமோஹத்தை நிவிருத்திக்க முடியாதென்றேதோன்றுகிறது. ஏனெனின், ஆங்கிலேய அரசாக்ஷியல்லவா? இப்போது இங்கிலீஷில் இரண்டு அக்ஷரமாவது தெரியாவிட்டால் மூடத்தனமென்று மஹாஜனங்களின் தோற்றம். பலவிதத்தில் பலாத்காரமாய் இங்கிலிஷ் பாஷை நம்மைக்கட்டுப் படுத்தி இருக்கிறது. அதை எப்படி அடியோடு அகற்றமுடியும் என்பதைப்பற்றி வெகுசிலர் அனுதாபப்படுகிறார்கள். ஆங்கிலத்துடன் கூடின, ஸம்ஸ்கிருத பாஷை, இருளும், ஒளியும் கூடியது போல் ஒன்றுக்கும் பிரயோஜனப்படவில்லை. ஒளியில் இருள் இல்லாமல் போகவேண்டியிருக்க, இருளால் ஒளி, ஒளிந்து கொண்டிருப்பது கலிகால வைபவத்திலேயே, ஒளிக்கு ஒளி சக்தியைக் கொடுப்பவனாகிய பகவானுடைய தூண்டுதலாலேயே ஸம்ஸ்கிருத ஒளி ஆங்கில இருளற்று ஜ்வலிக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இங்கிலீஷ் பாஷையுடன் கூடவாவது ஸம்ஸ்கிருதத்தை கட்டாயப்படிப்பாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்பது தான் இப்போது செய்துக்கொள்ளும் பிரார்த்தனை.

ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்றுக்கொண்டால் ஜனங்களுக்குச் சித்தம் கலங்காமல் சரியான மார்க்கம் புலப்படும். ஆஸ்திக்யகம் அதிசீக்கிரம் அதிகரிக்கும். ஸம்ஸ்கிருத பாஷைக்கு தேவபாஷை என்றொரு பெயருண்டு. தேவபாஷாப்யாஸதால் தேவவாஸனை அபிவிருத்தியடையும் ஆங்கில பாஷாப்யாஸத்தால் ஆங்கிலேய வாஸனை அதிகரித்து ஆங்கிலேய வாஸனையாலேயே இப்போது நாம் ஒன்றும் புரியாமலேயே க்ஷீணகதி அடைந்துவிட்டோம். ஆங்கிலேய அரசாக்ஷியில் ஆடம்பர வாழ்க்கை மிகுதியாய் விட்டது. அடக்கமாய் வாழ்க்கை நடத்தும் வழியை மறுபடியும் அடைவது வெகு ஸ்ரமமாயிருக்கிறது. புத்திமான்கள் இதனை நன்கு கவனிக், வேணுமாய்க் கோருகிறேன். ஸம்ஸ்கிருத பாஷையாலேயே அடக்க வாழ்க்கைமுறை திரும்பவும் ஏற்படவேண்டும்.

ஸம்ஸ்கிருத பாஷாப்யாஸத்தாலேயே நாமோ நமது தேசமோ, முன்னேறவேண்டும். வேறு வழியில்லை. ஸம்ஸ்கிருதத்தை பிராம்மணர்கள் மட்டிலும் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை. மற்றவரும் கற்றுக் கொள்ளலாம். ஆனால் அதில் வேதவரம்பு மீறுமலிருக்க வேண்டும். இப்போது பிராமணர்களே அதை அடியோடு அப்யஸிக்காமல் விட்டுவிட்டதுதான் வெகு வருத்தமாயிருக்கிறது. முதலில் பிராமண வகுப்பினர்களுக்கு வெகு முக்கியமானது இது. பிராமணர்கள் தன் தோஷத்தை ஒப்புக் கொள்ளாமல், ஒளிக்கக்கூடாது. அவர்கள் தான் முதலில் திருந்திக்கொள்ளவேண்டும். அப்போது அவர்களைப் பார்த்து மற்றவர்களும் திருந்திவிடுவார்கள். பிராமணர்களிடம் குற்றமிருப்பதாய் கூறினால் அவர்களுக்குக் கோபம் வரக்கூடாது. குற்றம் உண்மையாயிருந்தால் அதை நிவிருத்திக்க வல்லவர் முயற்சிக்கவேண்டும்.

பகவானும் பிராம்மண ஸமூகத்தின் குற்றங்களைத்தான் அவதார மூலமாய் நிவிருத்தி செய்கிறார். பிராம்மணர் ஸமூஹம் ஸம்ஸ்கிருத பாஷாப்யாஸத்தில் முதலில் பிடிவாதமாயிருக்கவேண்டும். இங்கிலிஷ் பாஷையில் ருசியையும், ப்ரமத்தையும் விலக்கிக் கொள்ளவேண்டும். பிராம்மண ஸமூஹத்தின் சீர்திருத்தந்தான் இப்போது அவச்யமாயிருக்கிறது. இதுவரையில் அதர்மச் செயல்களில் துணிச்சலை இதர வகுப்பினர்களுக்கு உண்டுபண்ணியது பிராமண ஸமூகமே. பிராம்மணர்கள் கோணவழிகளில் செல்லாமல் ஸம்ஸ்கிருத பாஷையை அப்யஸித்து கூடியமட்டும் ஆசாரங்களை விடாமலிருந்தால் இதர வகுப்பினரும் அவ்விதம் நடந்துவர ஸௌகர்யமாயிருக்கும். இதனாலே கீதையில்

'ब्राह्मण्येहि रक्षिते रक्षितःस्यात्सकलो धर्मः ॥'

என்று பிராம்மண ஸமூக சீர்திருத்தத்தை பலமாய் சொல்லியிருக்கிறது.

இப்போது ஹிந்தியை தேச பாஷையாக செய்ய நினைத்து கார்யங்கள் நடந்து வருகின்றன. அதைக்காட்டிலும் ஸம்ஸ்கிருத பாஷையை தேசபாஷையாகச் செய்யாலாமென்று நினைக்கிறேன். ஸம்ஸ்கிருதம் ஒரு காலத்தில் தேசபாஷையாகவே இருந்து வந்ததாகத்தெரிகிறது. இதற்குப் பிரமாணங்கள் பலவுள. நமது மதாசாரனுஷ்டானங்கள் யாவும் ஸம்ஸ்கிருத பாஷாமயங்களாகிய கிரந்தங்களில் தானிருக்கின்றன. ஹிந்தியிலில்லை. ஹிந்தியின் அபிவிருத்தியால் மதாசாரனுஷ்டானங்கள் விருத்தியடையாது. மதாபிவிருத்திக்கேற்ற பாஷாபிவிருத்தியையே நாம்இப்போது வற்புறுத்துகிறோம். இங்கிலீஷ் பாஷையால் எப்படி மதாபிவிருத்தி ஏற்படவில்லையோ, அப்படியே ஹிந்தி பாஷையாலும் மதம்பூர்ணமாயபிவிருத்தியடைய நியாயமில்லை. ஹிந்தி ஸம்ஸ்கிருதம் இரண்டையுமாவது தேச பாஷையாகப் பிரசாரம் செய்யதல் நலமாகும்இங்கிலீஷ்பாஷையைப்போல்ஹிந்தியை நான் வெறுக்கவில்லை. ஆனால் ஸம்ஸ்கிருதத்தைப்போல் ஹந்திபாஷையை பிரதானமாக நினைக்கவில்லை. தேசம் ஸ்வவசமான பிறகு தேச பாஷையாக எதை வைத்துக்கொள்வதென்பதைப் பற்றி யோசிக்கலாம். இப்போது முதலில் ஸம்ஸ்கிருதத்தின் க்ஷீண கதியை நிவர்த்திக்க வழி யென்னவென்பதைப்பற்றி யோசனை செய்வது தான் அவசியமாயிருக்கிறது. நான் சொல்வது எல்லோருடைய மனதிலும் ஸ்திரமாய் பதிந்திருக்கவேண்டும். ஸம்ஸ்கிருதத்தாலேயே தேவத்வம், மகரிஷித்வம், ஸ்வராஜ்யம், ஆயுராரோக்யம் இவை ஸித்திக்கும். ஆதலால் தேவ பாஷையைக்கற்றுக்கொள்ள ஆசைப் படுங்கள்.

ஸ்ரீ அய்யாதுரை அய்யர் அவர்கள் எழுதிய புஸ்தகங்கள்.

ராமாயணம் யோகசாஸ்திர நிரூபணம்.		0—8—0
பாகவதம்	do	0—4—0
கிருஷ்ண சரிதம்	do	0—2—0
பொதுமத போதினி		0—2—0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட் கும்பகோணம்.

पारित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம- ஹூ மார்கழி-மீ 19உ

ஹிந்து மஹாஸபையின் பிடிவாதம்.

ஹிந்து மஹாஸபையானது ஸனாதனதர்ம விஷயத்தில் நடந்துகொள்ளவேண்டிய மாதிரியைப்பற்றி நமது தலைவர் ஸ்ரீ நடேச அய்யரவர்கள் வெளியிட்டிருந்த அறிக்கைக்கு மதுரை மஹாநாட்டின் வரவேற்புக் கமிட்டித்தலைவரும், மஹாஸபையின் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவருமான திவான்பகதூர் கே. எஸ். ராமசாமி சாஸ்திரிகள் பத்திரிகைகளில் ஓர் பதில் வரைந்திருக்கிறார். ஹிந்துமஹாஸபையுடன் ஒத்துழைக்க ஆவல் கொண்டிருந்த ஸனாதனிகளுக்கு இது ஏமாற்றத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. மேலும் அவர் கூறியுள்ள சில அம்சங்கள் வைதிக மதத்தின் அடிப்படையான விஷயங்களை திரஸ்காரம் செய்வதாயுமிருக்கிறது.

ஸ்ரீமான் சாஸ்திரியார் தமது ஸொந்த ஹோதாவிலேயே அந்த பதிலை வெளியிட்டிருப்பதாகக் கூறிக்கொண்ட போதிலும் மஹா ஸபையின் போக்கும் இதுதான் என்பதை பாமரர்கள் கூட எளிதில் அறிந்து கொள்ளமுடியும். ஆதலால் மஹா ஸபை ஸனாதநிகளின் விருப்பத்தை அலக்ஷ்யம் செய்து தமது பிடிவாதத்தை காட்டியிருப்பதாகவே நினைக்க வேண்டியிருக்கிறது.

இனி ஸ்ரீ சாஸ்திரியார் கூறிப்பதை கவனித்தால் தேசகாலநிலைமையை அநுஸரித்து வைதிக தர்ம தத்வங்களை பலி பிட வேண்டியது அவச்யமென்று அவர் நினைப்பதாகத் தெரிகிறது. ஹிந்து மஹா ஸபையானது ஹிந்துக்களின் லௌகிக உரிமைகளைக் கவனிக்க ஏற்பட்டதே யல்லாது அது மத விஷயமான ஸபையல்ல வென்று முதலில் சாஸ்திரியார் கூறியிருக்கிறார். இது ஸந்தோஷமளிக்கக்கூடியதே. இந்த அபிப்ராயத்தை ஸ்ரீஸவர்க்காரும் தமது பிரஸங்கத்தில் சொல்லியிருக்கிறார்.

ஆயினும் ஸ்ரீ சாஸ்திரியார் இத்தோடு நின்றிருந்தால் நன்றாயிருக்கும். அப்படியன்றி அவர் ஜாதிப்பிரிவினை ஜாதி தர்மம் ஆகியவை விஷயமாக விபரீத அபிப்ராயங்களையே வெளியிட்டிருக்கிறார். இவ்விஷயமாக அவர் காந்திஜிக்குக்கூட வகாலத்து வாங்கிக்கொண்டு பரிந்துபேச முன்வந்துள்ளார். ஜாதிமுறையை மாற்றவேண்டுமென்று ஹிந்துஸபை வற்புறுத்தவில்லையாம். ஆனால் தீண்டாமை என்ற தீங்கை ஹிந்து ஸமூகத்தில் அப்படியே விட்டுவைத்திருக்கமுடியாதாம். தீண்டாதாரை அந்நிய மதத்தினர் இழுத்துக்கொண்டுபோகும்படி வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கவும் முடியாதாம். ஆதலால் தீண்டாமையை விலக்கவேண்டியது அவச்யமென்று ஸ்ரீ சாஸ்திரியார் வாதிக்கிறார். ஆகவே ஹிந்து மஹாஸபை இந்த வேலையை மேற்போட்டுக்கொண்டு வேலைசெய்யுமென்பதை ஸ்ரீ சாஸ்திரியார் தெளிவுபடுத்திவிட்டதாக நினைக்கிறோம்.

இந்த ஒரு விஷயம் மூலமாகவே ஹிந்து ஸபை வைதிகமதத்தின் முக்யதர்மங்களைத் தகர்த்து எறிய கங்கணம் கட்டிக்கொண்டிருப்பது உறுதியாகிறது. ஹிந்து மஹாஸபையானது மத ஸம்பந்தமான சங்கமல்லவென்றால் தீண்டாமையைப் பற்றி அது தீர்மானிக்க என்ன அதிகாரமுளது? ஜாதி பேதத்தைப்பற்றி ஹிந்து மஹாஸபை ஒன்றும் பேசாதென்று சாஸ்திரியார் கூறியதும் இதன் மூலம் அர்த்தமாகிவிடவில்லையா? தீண்டாமை என்பது பிறப்பு நிமித்தமாக ஏற்பட்ட ஜாதி பேதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஜாதி தர்மமென்றல்லவோ வைதிகமத ஸித்தாந்தமாயிருக்கிறது? இதை ஹிந்து மஹாஸபை எதிர்த்தால் ஜாதி முறையையும், அதைப் போதிக்கும், வேத, ஸ்மிருதி, புராண, சிஷ்டாசாராதிகளாள அடிப்படையான பிரமாணங்களையும் மஹாஸபை ஒப்பவில்லையென்பதே உறுதிப்படுகிறது. அப்படியானால் ஸனாதநிகள் மஹாஸபையில் சேரலாமென்று சாஸ்திரியார் அழைப்பதை எப்படி ஏற்கமுடியும்?

ஸனாதநிகள் கேட்பதெல்லாம் ஒரே ஒரு விஷயம்தான். எந்த ராஜிய ஸபையும் அந்தந்த வகுப்பாருக்கு உரிமையான மத ஸமூஹ விஷயங்களில் பிரவேசித்து சட்டமூலமான நிர்பந்தம் உண்டாக்கக் கூடாதென்பதே. ராஜிய அறிவாளிகள் பலரும் இந்த நியாயமான உரிமையை அங்கீகரித்தே வருகிறதைப் பல விடங்களில் பார்க்கிறோம். தேசத்தில் அமைதியேற்படவும் ராஜ்ய சக்கிரம் நன்கு நடை பெறவும் மேற்கண்ட அம்சம் முக்யமென வற்புறுத்தப்படுகிறது. ஸமீபத்தில் டாக்டர் ராதாகுமுதமூகர்ஜிகூட இந்த விஷயத்தை வற்புறுத்தியிருப்பதை ஸ்ரீமான் சாஸ்திரியார் அறிந்திருக்ககூடும்.

மஹாஸபையார் ஜனங்களிடம் தீண்டாமை விலக்கு பிரசாரம் நடத்துவதைக்கூட ஸநாதனிகள் ஆக்ஷேபிப்பதற்கில்லை. ஆனால் சட்டமூல நிர்பந்தம் செய்ய மாட்டோமென்ற ஒரு உறுதி மொழிகூடக் கொடுக்க முடியாதென்றால் மஹாஸபையை எப்படி தார்மிகர்கள் நம்பமுடியும்? காங்கிரஸுக்கும் மஹாஸபைக்கும் வித்தியாசமென்ன? மத உரிமையை நசுக்குவதில் இரண்டும் ஒன்றுபட்டதே. ஆதலால்தான் ஸ்ரீ சாஸ்திரியார் காந்திஜிக்கும பரிந்து பேசமுன் வந்திருக்கிறார். தீண்டாமை விலக்கு என்ற விஷய மூலமாக காந்திஜி வைதிக மதத்தையே கவிழ்க்க உள்ளூர எண்ணம் வைத்திருப்பதை சாஸ்திரியார் மறைத்தாலும் தார்மிகர்கள் இதில் ஏமாறமாட்டார்கள். ஆதலால் ஹிந்து மஹா ஸபையும் மத ஸமூஹவிஷயத்தில் காந்தீயத்தையே சரணமடைவதாயிருந்தால் அதில் ஸனாதநிகளுக்குக் கார்யமில்லை. ஸனாதநிகள் துர்பலர்களாயும், கட்டுப்பாடு இல்லாதவர்களாயுமிருப்பதாக நினைத்து காங்கிரஸோ, மஹா ஸபையோ அவர்களை அலக்ஷியம் செய்து வந்த காலம் போய்விட்டது.

ஸனாதநிகள் ஹிந்து மஹாஸபையை ஓர் புதிய எதிரியாக்கிக்கொள்ள விருப்பமில்லை. அதன் மத ஸம்பந்தமற்ற பிரசார கார்யத்திலும் ஸனாதநிகள் குறுக்கிட மாட்டார்கள். ஆதலால் சட்ட மூலமான நிர்ப்பந்த மெதுவும் செய்வதில்லை யென்ற உறுமொழியாவது அளித்து, பெரும்பாலோரான ஸனாதந ஹிந்துக்களின் ஆதரவைப் பெற்று மஹா ஸபை பரிபூர்ணமான ஹிந்து ஜன பிரதிநிதி ஸபை யென்ற பெருமையைப் பெறத்தவறி விட்டதற்கு நாம் வருந்துகிறோம்.

ஜெயிலுக்குப்போவதின் நோக்கம்?

காங்கிரஸ்காரர்கள் ஸத்யாக்ரஹம்செய்து ஜெயிலுக்குப் போகிறார்கள். இதில் பணக்காரர்கள் படிப்பாளிகள் கௌரவப்பட்டவர்கள் ஆகிய எல்லோரும் உத்ஸாஹம் காட்டி முன்வருகிறார்கள். இதன்மூலம் பொதுஜனங்கள் அவர்களிடம் அதிக கௌரவம் வைக்கிறார்கள். இது இயற்கை. ஆனால் இதன்மூலம் காங்கிரஸ் கக்ஷியார் தங்களது நலத்தைப் பெருக்கிக்கொள்ளவும், எலெக்ஷனில் வெற்றிபெற்று அரசியல் நிர்வாகத்தைக் கைப்பற்றவும் இடமுண்டாகிவிடுமென்றும் மற்ற கக்ஷியார் நினைக்கவும் பயப்படவும் ஆரம்பித்திருக்கிறார்கள். காங்கிரஸ்காரர் ஜெயிலுக்குப் போவது அடுத்த எலெக்ஷனில் ஜனங்களுடைய ஆதரவைப்பெறுவதற்காகச் செய்யப்படும் ஆடம்பரமென்றே மற்ற கக்ஷியார் பஹிரங்கமாகப் பேச முன்வந்திருக்கிறார்கள். சென்ற எலெக்ஷனில் 'நாங்கள் ஜெயிலுக்குப் போய் தியாகம் செய்தோம், எங்களுக்கே ஓட்டுக்கொடுங்கள்' என்ற பெரிய சலுகையைக்கொண்டே காங்கிரஸ்காரர்கள் பிரசாரம் நடத்தவில்லையா? ஆகையால் இப்போது காங்கிரஸிற்கு எதிரான வேறு கக்ஷிகளும் தாங்களும் ஜயிலுக்குப்போய் பொதுஜன அபிமானத்தை வசப்படுத்திக்கொள்ள யோஜித்துவருகின்றன.

மதுரையில் கூடிய ஹிந்துமஹாஸபை விஷயாலோசனைக் கூட்டத்தில் இந்த விஷயம் யோஜிக்கப்பட்டதாகத் தெரிகிறது. தங்கள் குறைகளை நிவர்த்திக்காவிட்டால் மஹாஸபையார் சட்டமறுப்புப் போன்ற தீவ்ரக்கிளர்ச்சியில் இறங்கவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

கல்கத்தாவில் கூடிய முஸ்லீம் லீக் கக்ஷி மாணவர்கள் பாகிஸ்தான்திட்டத்தை நிறைவேற்றாவிடில் ஸத்யாக்ரஹத்தில் இறங்க நேரிடுமென்று பயமுறுத்தியிருக்கிறார்கள்.

சென்னை மாகாணத்தில் விளங்கிவரும் ஜஸ்டிஸ் கக்ஷியென்ற சு ம. கக்ஷியாரும் ஜயிலுக்குப்போகும் திட்டமொன்றைப்பற்றி பிரசாரம் செய்துவருகிறார்கள். அடுத்த எலெக்ஷனில் காங்கிரஸ்காரர்கள் ஜஸ்டிஸை வீழ்த்தி வெற்றிபெற்றுவிடுவார்களென்ற அச்சம் அவர்களிடம் தோன்றிவிட்டது. இதை ஸமாளிக்கவேண்டுமல்லவா? இதற்காக தாங்களும் ஜெயில்போய் வோட்டர்களின் பிரீதியைப் பெறவேண்டுமென்ற ஆவல் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்காக காப்பிஹோட்டல் ஸத்யாக்ரஹம் ஒன்றை ஆரம்பிக்கப் போகிறார்களாம்.

ஸ்திரீகள் தங்கள் உரிமைகளை ஏற்காவிட்டால் ஸத்யாக்ரஹம் செய்யவேணுமென்று யோஜிக்கிறார்களாம். எல்லாம் விநோதமாயிருக்கிறது.

ஆங்கில அரசாக்ஷியே இந்தியாவிற்கு சாச்வதமாக இருக்கவேணுமென்றும் அது இல்லாவிட்டால் இந்தியா அமைதியாக இருக்காதென்றும் முடிவுகட்ட காரணம் வேறு என்ன வேண்டும்?

திருவாதி ஸமஸ்கிருத காலேஜ்.

திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜ் விஷயமாக தஞ்சை ஜில்லா போர்டார் இரண்டு விபரீதத் தீர்மானங்களைச் செய்திருப்பது நேயர்களறிந்ததே. ஸமஸ்கிருத ஸாஹித்யப் பிரிவு வகுப்பை ரத்து செய்தும், எல்லா ஜாதியாரும் ஸமபங்க்தியிலேயே சாப்பிட வேணுமென்றும் போர்டார் தீர்மானம் செய்திருப்பது அவர்களுடைய அதிகார எல்லையை மீறிய செயலாகும். மிக்க ஆக்ஷேபகரமான இத்தீர்மானத்தைப் பற்றித் தென்னிந்தியாவில் மௌனம் ஏற்பட்டிருப்பது மிகவும் வருந்ததக்கது. ஸம்ஸ்கிருதாபிமானிகளும், வைதிகாசார சிஷ்டர்களுமான ஹிந்துக்கள் நிறம்பிய நம் தேசத்தில் இந்த அநீதியைப் பற்றிக்கிளர்ச்சி செய்யாமலிருப்பது நியாயமா? ஆங்கிலோ இந்தியப் பத்திரிகையாகிய சென்னை 'மெயில்' பத்திரிகைகூட இந்த உத்திரவைப் பலமாக ஆக்ஷேபித்து உடனேயே தலையங்கமொன்றைவரைந்திருந்தது. ஆனால் இந்தியர்களால் நடத்தப்படும் பத்திரிகைகள் ஒன்றாவது இதைக் கண்டிக்க முன்வராதது ஆச்சர்யமாயிருக்கிறது. அவைகளின் போக்கு நமக்குத் தெரிந்தது தானே?

திருவாதி ஸம்ஸ்கிருத காலேஜானது தஞ்சை மஹாராஜவினால் "வேத சாஸ்திர அபிவிருத்தி" என்ற முக்ய நோக்கத்துடன் ஸ்தாபிக்கப் பட்டதாகும். மூலதனம் அதிகமாயிருந்த ஸமயத்தில், ஸம்ஸ்கிருத பாஷாபிவிருத்திகரமானதும், மஹாராஜாவின் நோக்கத்திற்கு விரோத மற்றதுமான வழியிலும் திட்டம் தயாரிக்கப்பட்டது. போர்டார் நிர்வாஹத்தை ஏற்று நடத்துவதில் ஸ்தாபகரின் நோக்கத்திற்கும், அடிப்படையான அம்சங்களுக்கும் விருத்தமாக எதையும் செய்ய அதிகாரம் கிடையாது.

ஸாஹித்யப் பிரிவு ஸம்ஸ்கிருத பாஷாபிவிருத்திக்கு முக்ய ஸாதனமானது. அநேக விடங்களில் இந்த ஸௌகர்ய மில்லாததாலும் ஏராளமான மாணவர்கள் திருவாதி காலேஜியில் இந்த வகுப்பில் சேர ஸௌகர்யமிருந்துவந்தது. பிராம்மணர்கள் மட்டுமன்றி பிராம்மணரல்லாதாரும் இந்த வகுப்பில் சேர்ந்து படித்து வருகிறார்கள். பண நெருக்கடி காரணமாயும் இதை எடுக்க போர்டாருக்கு அதிகாரமில்லை. வேறுஇனங்களில் செய்யப்படும் அநாவச்ய செலவுகளைக் குறைக்க வேண்டியதே கடமை.

இந்த தர்மஸொத்தின் செலவில் செய்யப்படும் இரண்டு ஹை ஸ்கூல் களையும் நிறுத்தி விட்டுப் பணத்தை ஈடு செய்துகொள்ள வேணுமென்றே வித்யா இலகா அதிகாரியும் யோஜனை கூறியிருப்பதாகத் தெரிகிறது. உண்மையில் அந்த இரண்டு ஸ்கூல்களும் மஹாராஜாவின் அபிப்பிராயத்திற்கு மாறுபட்டதாக ஏற்பட்டவைகளேயாகும். ஆதலால் போர்டார் நியாய வழியில் நடந்து கொண்டதாகத் தெரியவில்லை. வகுப்புத்வேஷம், பாஷைத்வேஷம் ஆகியவைகளின் காரணமாக அவர்கள் இப்படிச் செய்திருப்பதாகப் பொதுஜனங்கள் நினைக்க இடம் கொடுக்கலாகாது.

ஸமபந்தி சாப்பாடு விஷயமானது மிக விபரீதமானது பெரும் புரக்ஷிகரமானது. ஸமூஹச் சீர்திருத்த விஷயத்தைப் பொது ஜனங்களிடம் பலாத்காரமாகத் திணிக்க இது ஒரு தந்திரமாகும். பிராம்மணரல்லாதாரிலேயே பற்பல பிரிவினர் ஸமபந்தி போஜனம் செய்யும் வழக்கமில்லை. சாப்பிடும் முறை, சாப்பிடும் பதார்த்தங்கள். ஆகியவை வெவ்வேறாக இருக்கையில் எல்லோரையும் சேர்ந்து சாப்பிடும்படி நிர்ப்பந்திக்க போர்டுக்கு என்ன அதிகாரம்? இது மத விஷயத்திலும் பழக்க வழக்க விஷயத்திலும் திட்டமாகத் தலையிடுவதாயிருக்கிறது. இதற்குப் பொதுஜனங்கள் ஸம்மதிக்கமுடியாது.

கவர்மெண்டார் இவ்விஷயத்தில் தக்க நடவடிக்கையெடுக்க முன்வரவேணும். லௌகிக கார்ய நிர்வாஹத்திற்காக ஏற்பட்ட ஜில்லா போர்ட் போன்றவை, தங்களுக்கு அதிகாரமில்லாத மத-ஸமூஹ விஷயங்களில் நிர்பந்தகரமான நிர்ணயம் செய்யவிடுவது மிகுந்த அனர்த்தமாகும். இதனால் காலக்கிரமத்தில் காலேஜே மறைந்துபோய் மஹாராஜவின் நோக்கமும் பாழாக இடமேற்படும். போர்ட்டார் போஜன சாலைகளையே ரத்து செய்துவிட்டு மாணவர்களுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு அவரவர் இஷ்டமான இடத்தில் ஸாப்பிட்டுக் கொள்ளும்படி விட்டுவிடலாம். இப்படிச்செய்தால் பணநெருக்கடியும் மத விஷயமான தகராறும் ஸமாளிக்கக் கூடியதாகிவிடும்.

குடந்தையில் நைஷ்டிக பிரம்மசாரி

செங்கல்பட்டுஜில்லாவைசேர்ந்த பனையூர் ப்ரும்மஸ்ரீ நா. ராமனாத சாஸ்திரிகள் அவர்கள் என்னும் நாமதேயத்தையுடைய நைஷ்டிக பிரும்மசாரி ஒருவர் நம் நகருக்கு புண்ணிய வசத்தினால் 10 திங்களாக விஜயம் செய்திருக்கிறார்கள். அவர் சென்ற 22-12-40ல் பானுவாரம் நமது நகர் சகாஜி நாயகர்தெரு கவர்ன்மெண்டு காலேஜ் புரொபஸர் ஸ்ரீ சங்கரநாராயணய்யர் அவர் கிரஹத்திலும், 24—12—40 மங்கள வாரத் தன்று டபீர் கீழத்தெருவில் அத்வைதசபை குமாஸ்தாவும், வக்கீல் குமாஸ்தாவுமான பரித்தியூர் ஸ்ரீ எ. கோபலய்யரவர்கள் கிரஹத்திலும் யாவரும் கேட்டு மகிழும்படியாக மிகவும் ருசிகரமாக "ஸ்நானவிதி ஸந்தியாவந்தன நித்யகர்மானுஷ்டானங்களை" விரிவாகவும் வெகுவிமர்சையாகவும் உபந்யசித்தார்கள் அநேக ஆஸ்திக ஸ்திரீ புருஷர்கள் சிரவணம் செய்து ஆனந்தித்தார்கள். ஷை உபன்யாஸத்தின் தொடர்ச்சி 25—12—40 புதன்கிழமை முதல் ஷை ஸ்ரீ சங்கரநாரயணய்யர் அவர்கள் கிரஹத்தில் நடைபெற்றது. ஆஸ்திக சிரோமணிகள் யாவரும் கேட்டு மகிழ்ந்தார்கள். (ந-கி)

நமது நிருபர்களுக்கு வேண்டுகோள்

ஆர்யதர்மம் நிருபர்கள் ஆங்காங்கு நடக்கும் முக்ய விஷயங்களையும், ஸமயோசிதமான வியாஸங்களையும் எழுதியனுப்பி ஒத்துழைக்கக்கோருகிறோம். ஸமாசாரங்களை வளர்த்தாமல், கடுதாசியில் ஒரே பக்கத்தில் மசியால் விளக்கமாகவும் எழுதி யனுப்பவேணும். திங்கட்கிழமைக்குள் வெளியூர் நிருபர்கள் தங்கள் விஷயங்களை அனுப்பினால் அந்த வாரத்திலேயே பிரசுரிக்க ஸௌகர்யப்படும்.

ஸம்ஸ்கிருத எழுத்துக்களையோ, ஸம்ஸ்கிருத பதங்களையோ கலந்து எழுதுவதால் பிரசுரிக்க தாமஸம் ஏற்படுவதுடன் சிரமமும் ஏற்படுகிறது. ஆகையால் கூடிய வரையில் அவச்யமான ஸந்தர்ப்பம் தவிர, மற்றவைகளில் ஸம்ஸ்கிருதத்தை கலக்காமல் எழுதினால் தான் ஸௌகர்யப்படும். இங்கிலீஷில் விஷயங்களை எழுதுவதால் மொழிபெயர்க்க சிரமமும், தாமஸமும் ஏற்படுகிறது. ஆகையால் எந்த விஷயத்தையும் தமிழிலேயே எழுதியனுப்பக்கோருகிறோம். மானேஜர்.

சந்தாதார்களுக்கு அறிவிப்பு

ஆர்யதர்மம் பத்திரிகையின் புதிய வர்ஷத்திற்கான சந்தாவை சந்தாதார்கள் சீக்கிரத்தில் அனுப்பி எப்போதும் போல் பத்திரிகையை ஆதரிக்கவேண்டுகிறோம்.

புதிய வருஷத்திற்கு சந்தா 2—4—0 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அபிமானிகள் தாமஸியாமல் சந்தாவை அனுப்புவதுடன் அங்காங்கு புதியசந்தாதார்களையும் சேர்த்து உதவி புரியக்கோருகிறோம.

ஏற்கனவே புதியவர்ஷத்திற்கும் சந்தா செலுத்தி விட்டவர்களுக்கும் 2—4--0 வீதம் வரவுவைத்துக் கொள்ளப்பட்டு பாக்கித் தொகையை அடுத்த வருஷத்தின் கணக்கில் வைத்துக்கொள்ளப்படும். மானேஜர்.

டாக்டர்களுக்கு ஜோதிஷம் கற்பிக்கவேண்டும்.

பிரபல டாக்டரின் யோசனை.

சென்னையில் நடந்த டாக்டர்களின் மஹாநாட்டில் டாக்டர் குருஸாமி முதலியார் பேசுகையில், நோயாளிகளுக்கு வெறும் மருந்தினால் மட்டும் சிகித்சை செய்வது போதா தென்றும், நவக்கிரஹங்களின் கோளாறுகளைக் கண்டுபிடித்து அதன் பரிஹார மூலமாயும் சிகித்ஸை செய்வது அவச்யமென்றும், மனித சரீரத்திற்கும் நக்ஷத்திரங்களுக்கும் நெருங்கிய ஸம்பந்த மிருப்பதாயும், ஆதலால் டாக்டர்கள் ஜோதிஷம் கற்கவேண்டியது அவச்யமென்றும வற்புறுத்தினார். ஆயுர்வேதமும், தர்ம சாஸ்திரமும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இந்த உண்மையை நமக்கு போதித்துள்ளன.

திருவண்ணாமலை கோவில் டிரஸ்டிகள்மீது தாவா.

திருவண்ணாமலைக் கோயில் அர்த்த மண்டபத்தில் பிராம்மணர்கள் பிரவேசிக்கக் கூடாதென்று டிரஸ்டிகள் செய்த உத்திரவை ஆக்ஷேபித்து கோர்ட்டில் தாவா செய்ய வேண்டுமென்று அவ்வூர் பிராம்மண மஹா ஸபையாரால் தீர்மானிக்கப்பட்டது. இவ்விஷயமாக பிரபலஸ்தர்கள் பலர் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மீனாக்ஷி கோவில் பஹிஷ்காரம். ஆஸ்திகர்களின் உறுதி.

மதுரையில் மீனாக்ஷி கோவில் பஹிஷ்காரம் வெற்றிகரமாயிருக்கிறது. வைதிகப் பற்றுள்ள சைவ ஆஸ்திகர்கள் எந்தஜாதியினரும் கண்டிப்பாக கோவிலுக்குப் போவதில்லை. பிராம்மணர்கள் வெகு உறுதியாக பஹிஷ்காரம் நடத்துகிறார்கள். ஸ்திரீகள் கோவிலைக் கண்ணெடுத்துப்பார்ப்பது கூட இல்லை.

இதற்குப் பதிலாக ஸனாதந தர்ம வித்யாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஸ்ரீ பால மீனாம்பிகா ஸன்னதியில் இருவேளையிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடி தர்சனம் அர்ச்சனை முதலானவை நடத்துவது ஆச்சர்யமாயிருக்கிறது. மீனாக்ஷி கோவிலை விட இங்கு மஹிமை அதிகரித்து விட்டது. ஸ்ரீநடேசய்யரவர்களின் செல்வாக்கு மிக அதிசயமாயிருக்கிறதென்று மதுரைக்குச் சென்றிருந்தவர்கள் மூலம் அறிகிறோம்.

ராஜபுத்ரக்கதைகள்.

ராஜஸ்தானத்திலுள்ள 36 ராஜ வம்சங்களில், மேவார் வம்சம் முதன்மையானது ஸூர்ய வம்சத்தில் உதித்து ஸ்ரீ ராமனை மூதாதையாய் பெற்ற இவ்வம்சம் தன் குல கௌரவம் தாழாது எக்காலத்திலும் மேன்மையுடன் விளங்குவது.

மேவார் அரச குலத்தார் தற்போது லாகூர் என்று கூறப்படும் பிரதேசத்தில் வசித்தவர்கள். ஸ்ரீ ராமனது குமாரனான லவனால் நிர்மாணிக்கப்பட்டது இது. பிறகு கனகஸேனர் காலத்தில் துவாரகைக்கு வசிக்கச் சென்றனர். கி. பி. 144ல் ஸௌராஷ்ட்டிர தேசத்தில் வீர நகரத்தை நிர்மாணித்தவர் இக்கனகஸேனரே ஆவார். நான்கு தலைமுறைகளுக்கு பிறகு இவர் வம்சத்தில் தோன்றிய விஜயஸேனர் நிர்மாணித்தனவே, விஜயபுரம் விதர்பை, வலபீபுரம் என்பன.

ஹூணர்கள் வலபிபுரத்தைத் தகர்த்து எரிந்தனர். அரசனான சிலாதித்யனது கடைசி உபாயமும் பயன்படவில்லை. ஆஹூதி செய்தும் ஸூர்ய குண்டத்திலிருந்து ஸப்தாச்வம் வரவில்லை. எப்படி வரும்? அவன் மந்திரியே எதிரிகளிடம் சென்று சேர்ந்து கொண்டான். ஹோமத்தைக்கெடுத்து, முயற்சியை அழிக்கும் முறையை போதித்து விட்டான். சிலாதித்யன் தன் சேனையுடன் யுத்த களத்திலே மாண்டான். பெண்டுகளும் தீக்குளித்தனர். கோட்டையும் நகரமும் அழிந்தன.

ஆயினும் யாவும் அழிந்துவிடவில்லை. அரசனின் மனைவிகளில் ஒருவளான புஷ்பவதி மட்டில் அச்சமயம் வலபீபுரத்தில் இல்லை. தன் பிறந்த நாடான சந்திராவதிக்குச் சென்றிருந்தாள். அம்பாபவானியை அவள் பலகால் வேண்டியது பலித்துவிட்டது. அம்பாள் அருளினாள். புஷ்பவதி கர்பவதியாகி விட்டாள். தன் காணிக்கையைச்செலுத்தவே கோவில்சென்றிருந்தாள். திரும்பி வருகையில் இக்கோர செய்தியை செவியுற்றாள். அழுதாள் புலம்பினாள். மகனைப் பெருமுன்பே பதியை இழந்தாளே! துக்கம் தாளாது அருகிலுள்ள ஓர் மலைக் குஹையிலேயே தங்கினாள். அங்கேயே மகனையும் இன்றாள். வீர நகரத்தைச்சேர்ந்த கமலாவதி யென்னும் பார்பனியிடம் பிறந்த சிசுவை ஒப்புவித்தாள். தன் குழந்தையைப் போல் வளர்த்து வரும்படி வேண்டிகொண்டாள். பிராமணக் குழந்தையாகவே பாவித்து கல்வி கற்றுக் கொடுக்க வேண்டுமென்றும், ஆனால் மணம் செய்வது ராஜபுத்ர கன்யையுக்கே என்று உறுதி வாங்கிக் கொண்டு அங்கேயே சிதைமூட்டி சடலத்தைத்துறந்து கணவனைக் கிட்டினாள்.

கோயில் குருக்கள் மகளான அப்பார்ப்பனச் சிறுமியே தாயானாள். அருமையாக வளர்த்தாள். குகையில் பிறந்த இக் குழவிக்கு கோகன் என்று பெயரிட்டாள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது குழந்தை.

சூரிய கிரணத்தை ஒளித்து வைப்பதுமுண்டோ? ராஜபுத்ரனாகவே வளர்ந்தான் பையன். ராஜபுத்ர குழந்தைகளுடனே சேர்க்கை. வேட்டைகளிலும் துடுக்கான செயல்களிலுமே ஈடுபாடு. 11 வயதுக்குள்ளே தன்னை வளர்த்து வரும் தாய் தந்தையர்களுக்கு பொறுக்க முடியாதவனாக ஆகிவிட்டான். முரட்டு பில்லர்களுடனே அலைந்து திரிந்தான். அவ் வனபுத்ரர்களும் இவனையே தலைவனாகக் கொண்டார்கள்.

ஒரு நாள் சிறுவர்கள் காட்டில் விளையாடிக்கொண்டிருந்தனர். யார் அரசனாக இருப்பது என்று சர்சை யுண்டாயிற்று. கோகனே அரசனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். உயரிய ஆஸனத்தில் இவனை இருக்கச் செய்தனர். பில்லர் சிறுவன் ஒருவன், தன் கைவிரலைத் துணித்து, இரத்தத்தைக் கொண்டு, ராஜ சின்னமான திலகத்தை இவனுக்கு இட்டான். விளையாட்டு முடியுமுன்பே பில்லர் தலைவனான மண்டலிகனும் அவ்விடம் வந்தான். கண்டான், கோகனையை தன்பின் அரசன் எனக் கொண்டான். கோகன் வடுருக்கு அரசனானான். கோகிலர்கள் என்ற அவனது ஸந்ததிகளே எட்டு தலை முறைகள் இங்கே அரசு புரிந்துவந்தனர் என்று தெரிகிறது.

(தொடரும்) K. V.

பிராஹ்மண மஹாசபை பள்ளத்தூர்

முதலாவது ஆண்டுவிழா

8—12—40-உ காலை 9 மணிக்கு சபையிலுள்ள படங்களுக்கு வைதீக முறைப்படி பூஜை அர்ச்சனை நடந்தது.

பின்னர் மாலை 3½ மணிக்கு மேளவாத்தியங்களுடன் தலைவரை ஊர்வலமாக ஆண்டு விழா நடை பெறுமிடத்திற்கு அழைத்துவர பெற்றது. 4 மணிக்கு சென்றவருஷத்தின் கணக்குகள் அங்கீகரிக்கப்பட்டு புதிய நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிறகு 4¼ மணிக்கு ஸ்ரீபண்டித முத்து வெங்கடாசலமய்யர், நேத்ரார்பகசரித்திரத்தை உபன்யாஸித்தார்.

5-30 மணிக்கு கோவிலூர் வர்ணாஸ்ரம சங்கத்தலைவரும் ஆண்டுவிழாத் தலைவருமான ஸ்ரீதர்ம ராஜ ரெங்கனாதசாஸ்த்திரிகளவர்களின் முகவுரை பிரசங்கம் வெகு உருக்கமாக நீண்டநேரம் உபன்யாசம் நடைபெற்றது. பின்னர் 8 மணிக்கு வந்தனோபசாரம் கூறப்பெற்றது.

8-30 மணிக்கு ஸ்ரீரங்கம் ரெங்கபாகவதரவர்களால் சீதா கல்யாண கதாகாலக்ஷேபம் பக்கவாத்தியங்களுடன் வெகு விமரிசையாய் நடைபெற்றது. ந. நி.

தெய்வநெறிகழகம் பஜனை

1940-ஸூ டிசம்பர்மீ 25, 26, 27, 28ம் தேதிகளில் ஹிமாலயத்தைச் சேர்ந்த ஆளந்த குடீரம் ஸ்ரீ பரம ஹம்ஸபரிவ்ராஜக சற்குரு சிவாநந்தசரஸ்வதி ஸ்வாமிகளின் உத்திரவுபடி சாதனாவாரம் இதனடியில் கண்ட விபரப்படி கொண்டாடப்பட்டது.

பிரதி தினம் காலை 4 மணியிலிருந்து 8 மணிவரை பஜனகோஷ்டியுடன் நகரத்தில் முக்யமான ஈஸ்வரன் கோவில், ஆஞ்சனேயர் கோவில், பாண்டிரோட், கச்சேரித் தெரு, ஹனுமார் கோவில் தெரு, புதுத்தெரு, முருங்கபாளையத்தெரு, பிரிஸ்டாக்ரோட், பஜனைகோவில்தெரு, சந்தான கோபாலபுரம் அக்ரஹாரம் வழியாக நகரகீர்த்தனை செய்து, தீபலங்காரம், ஆராதனை, பிரசாதம் வழங்கப்பட்டது. மாலை 3 மணி முதல் 4 வரை லிகிதஜபமும் 26—12—40 வியாழக்கிழமை 5 மணிக்கு ஸ்ரீ உப. வே. டி. கே. ராஜகோபால அய்யங்கார்ஸ்வாமி எம். எ. எல். டி. அவர்கள் ஆண்டாள் பக்தியின் விசேஷம் மிகவும் விரிவாகவும் அனேக புராண சம்மந்தமான பாகவதோத்தமர்களின் பக்தியின் விசேஷங்களையும் தெளிவாக எடுத்து கூறி மனித பிறவி எடுத்த அனைவரும் செய்யவேண்டிய பக்தி, பகவத்சரணாரவிந்தங்களில் செலுத்த வேண்டிய விசேஷ பக்தி, சிரத்தையையும் விளக்கமாக எடுத்துப்பேசினார்.

27-12-40 வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு ஸ்ரீ உப. வே. சீனுவாஸ அய்யங்கார் ஸ்வாமி பி. எ. அவர்கள் ஓதாது ஓதி நனி உயர்ந்த உத்தமன் சரித்திரத்தை கம்ப ராமாயணத்திலிருந்து மிகவும் விரிவாகவும் மானிட வர்க்கத்தார் அனுஷ்டிக்க வேண்டிய திட பக்தி, நம்பிக்கை முதலியவற்றால் முடிவில் அடையும் பலனையும் விளக்கமாகவும் கூறினார்.

28-12-40 சனிக்கிழமை மாலை 5மணிக்கு ப்ரம்மஸ்ரீ ஆனங்கார் பி. வெங்கட்ராம சாஸ்திரிகள் அவர்கள் குருபக்தி, வைதீக கர்ம விசேஷங்களின் பல சித்தியை லௌகீக த்ருஷ்டாந்திரங்களுடன் விரிவாக உபன்யசித்தார்.

இரவு 8மணிக்கு திவ்ய நாம பஜனையுடன் சாதனா வாரம் மிகவும் விமரிசையுடன் இனிது முடிவுற்றது.

எ. எச். ரங்காசாரி.

பால்ய விவாஹத்தடை மசோதா

ஹைதராபாத்தில் நிராகரிக்கப்பட்டது.

"மதத்தில் தலையிடமுடியாது"

சென்ற வாரம் ஹைதராபாத் சட்டஸபையில், பால்யவிவாஹத்தடை மசோதா, (சாரதாசட்டத்தைப் போன்றது) கொண்டுவரப்பட்டு சட்டமாக்க பிரேரேபிக்கப்பட்டது. நைஜாம் கவர்மெண்டார் ஹிந்துக்களின் விவாஹம்போன்ற மத விஷயங்களில் பிரவேசிக்க விரும்பவில்லையென்றும், ஆதலால் இந்த சீர்திருத்த மசோதாவை எதிர்ப்பதாயும் அங்கீகரிக்க முடியாதென்றும் கவர்மெண்ட் தரப்பில் சொல்லிவிட்டனர். வேறு பல பிரபலஸ்தர்களும் மசோதாவை எதிர்த்துப் பேசினார்கள். அதன் பிறகு அந்த மசோதா நிராகரிக்கப்பட்டுவிட்டது.

மாவுகளை கொடுத்து
குழந்தைகளின் குடலைக்கெடுக்காதீர்கள். தாய்ப்பால்தான்
குழந்தைகளுக்குச் சரியான உணவு.

பயஸ்யா (Regd)
தாய்ப்பாலைவிசேஷமாய்வளர்க்கும்
திவ்ய ரஸாயனம்
விலை ரூ. 2—4—0
(Packing& Postge extra)

"ஆத்ரேய"
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ், தென்னூர் ரோடு, திருச்சிராபள்ளி.
ப்ரோப்ரைடர்: V. B. நடராஜசாஸ்திரீ,
ஆயுர்வேதாசார்யா

பரத ராம ஸம்வாதம்.

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியர் ஆக்ஞை பிரகாரம் 25—12—40 புதன்கிழமை 2-வது ஏகாதசியன்று மாலை 8 மணிக்கு சேங்காலிபுரம் "ப்ரொவிஷன் ஸ்டோர்ஸ் லிமிடெட்" கட்டிடத்திண்ணையில் சதுர்சாஸ்திர பண்டிதர் ஸ்ரீ கே. வைத்தியனாதசாஸ்திரிகள், செய்த பிரசங்கத்தின் சுருக்கம்.

இக்காலத்தில் எல்லோராலும் கவனிக்கப்படுகிறது ராம ராஜ்யமே. பரதாழ்வான் சித்ரகூடத்தில் மகரிஷியின் கூட்டத்தில் சக்ரவர்த்தி திருமகனை பிரார்த்தித்தது அயோத்தி ராஜ்யத்தை அடைந்து ஜனங்களை பரிபாலிப்பது, நமது கடமை என்றார். அதற்கு ராகவன் உன்னையும் என்னையும் பிதாவினுடைய ஆக்ஞா பிரகாரம், ராஜ்யத்தை நீயே அடைவதும் நான் 14 வருஷம் வனத்திலிருப்பதும் கடமை.

பரதன்:— தர்மத்தை நிலைநாட்டுவது உண்மையானல் ஜேஷ்டனுக்கு ராஜ்யமும் ராஜ்யபரணம் முக்கிய தர்மம் என்பதை அறிய வேண்டும்.

ராமன்.— இரண்டாம் தடவை விருத்தமாக நடப்பது எனது கடமையல்ல. பிரதிக்ஞையை நிறைவேற்றுவது முக்கியமான லக்ஷியம். இக்காலத்து அரசர்கள் மாதிரி நிலைமையை மாறிமாறி சொல்வது ஹிந்து தர்மத்தின் உள் கருத்தல்ல. உன் தாயாரை கலியாணம் பிதாசெய்த காலத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதி—சத்தியத்திற்காக தன்னுடைய பிராணனையும் இழப்பது வேதத்தில் கூறிய தர்மம். அதன்படி நடப்பது எனது கடமை. காலத்திற்கு தக்கவாறு அர்த்தசாஸ்த்திரத்தின் தத்வம் தர்ம சாஸ்த்திரத்திற்கு விரோதப்பட்டால் தர்ம சாஸ்திரமே மேலிட்டதென்பதை நீ அறிய வேண்டும். உன்னுடைய அபிப்பிராயப் பிரகாரம் நான் இந்த ராஜ்யத்தை ஒப்புக் கொள்வதற்கு 14 வருஷம் நான் தேச சேவைசெய்து சாமான்ய ஜனங்ளுகடைய குணங்களை எல்லாம் அறிந்த பிறகு ராஜ்யத்தை அறியவேண்டும். பரத தேசத்திற்கு உன்னதமான லக்ஷியம், தியாகம், அஹிம்ஸை, ஆத்மதத்வம் முதலியவைகளை இந்த ஸம்வாதத்தில் விசேஷமாக குறிப்பிட்டிருக்கிறார்.

கடைசியாக இந்த பரத ராம சம்வாதத்தினுடைய அர்த்தமாக ஸ்ரீமஹா பாரதத்தில் ஸ்ரீகிருஷ்ணார்ஜுன ஸம்வாதமாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் பாரதீயர்கள் இந்த ஸம்வாத மூலமாய் தெரிந்து கொள்வது தியாகம், அஹிம்ஸை, ஆத்மதத்வம், ஸ்திரபிரதிக்ஞை பகவத்பாத சேவை முதலியவைகள் என்பது வெளியாகிறது.

தனுர் மாஸ பஜனை:—சேங்கலிபுரம் கிருமத்தில் சங்கீத வித்வான் காலம் சென்ற கோனேரிராஜபுரம் வைத்தினாதய்யர் குமாரர் ஸ்ரீ குருமூர்த்தி அய்யர் அவர்களின் தலைமையில் தனுர்மாதத்தில் ஸ்ரீ கிரிபிரதக்ஷணமும், உயர்ந்தசங்கீத த்வனியுடன் கூடிய பஜனை பத்ததி நடந்து வருவது முன் காலத்தில் பிரக்லாதன் அநேக பாலர்களோடு ஸ்ரீநாராயண பஜனையும் செய்ததைக் ஸ்மரிக்கும்படி செய்கிறது.

S. சக்கரபாணி அய்யர்.

லக்ஷலிங்க பூஜை, லக்ஷார்ச்சனை, லக்ஷதீபம்.
திருவிடைமருதூர்.

ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமி ஆலய கல்யாண மண்டபத்தில் நகரம் தன வைஸ்ய ப்ரமுகர் ஒருவரால் சென்ற (18—12—40) புதன் கிழமை முதல் மண்டலமொன்றுக்கு 81 லிங்கங்கள் வீதம் 9மண்டலங்கள் கொண்ட ஒரு வேதிகையாக 11 வேதிகைகளில் சிவாசார்யர்களைக் கொண்டு ஆகமோக்தமாகப் பூஜித்து ஒவ்வொரு தினமும் ஷை லிங்கங்களை காவேரி நதியில் சேர்த்துவிட்டு தினமும் நூதனமான லிங்கங்களாக 11 தினங்கள் பூஜையும் ஸ்ரீமஹாலிங்க மூர்த்திக்கு லக்ஷார்ச்சனையும் (28—12—40) சனிக்கிழமை அமாவாஸ்யை ஆன்றிரவு ஷை லக்ஷலிங்க பூஜை, லக்ஷார்ச்சனை பூர்த்தியும் ராத்ரி லக்ஷதீப மஹோத்ஸவமும் நடைபெறும்.

ஒ. நி.

ஏகாதசி உபந்நியாஸம்.

ராமேச்வரம்.

விக்ரமஷு மார்கழிமீ 11உ. 25-12-40) அன்று வை. முத்து சுப்பிரமணிய சாஸ்திரியள் தலைமையில் ஏகாதசி விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

ஷை விழாவில் மு. வ. கோபால சாஸ்திரியள் அவர்களால் பகவத்கீதை 2-வது அத்தியாயம் காலையில் பாராயணம் செய்யப்பட்டு, P. மஹாதேவ சாஸ்திரியள் அவர்களால் அன்று இரவு வெகு விமரிசையாய் உபந்யாஸம் செய்யப்பட்டது. பிறகு சங்க காரியதரிசி மு. வ. சேஷா சாஸ்திரியள் அவர்களால் சங்க சட்டதிட்டங்களை எடுத்து உறைக்கப்பட்டும், ஒவ்வொரு ஊர்களிலும் ஷை சங்கம் ஏற்படுத்தி நாஸ்திகம் நிறைந்த இன்னாளில் ஆஸ்திகத்தை பறப்ப பிற்கால ஸந்ததிகளான வாலிபர்கள் ஒவ்வொருவரும் தார்மிகயுவக் சங்கத்தின் மூலம் பாடுபடவேண்டியதுஅவசியம் எனக் கேட்டுக்கொண்டு தலைவர் பிரசங்கத்துடன் தீப ஆராதனை வாழ்த்து கீதம் பாடப்பட்டு கூட்டம் இனிது நிறைவேறியது.

ஷை சங்கத்தின் 1940 டிஸம்பர் 3-உ மஹாசபை தீர்மானப்படி தனுர்மாஸ உஷக் காலபஜனை உத்ஸவம் மஹா ஜனங்களாலும் சங்க மெம்பர்களாலும் கொண்டாடப்படுகிறது.

காரியதரிசி.

மாணவர் யாத்ரா கோஷ்டியில் ஹரிஜனப்பையன்களுண்டா?

கோயில் நிர்வாக ஆபீஸரின் கேள்வி

சென்னை ஹிந்து தியாலாஜிகல் ஹைஸ்கூல் மாணவர்கள் 400 பேர்களும், உபாத்தியாயர்கள் 50-க்கு மேல்பட்டவர்களும் டிசம்பர் லீவைக்கருதி பிரதி வருஷமும் ஸ்பெஷல் ட்ரெயின் ஏற்பாடுடன் முக்கியமான க்ஷேத்ரங்களுக்கு யாத்ரை செய்து வருகின்றனர்.

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆதிநாத ஆழ்வார் தேவஸ்தான எக்ஸிகூடிவ் ஆபீஸர்க்கு மாணவர்கள் யாத்ரா விஜயத்தை தியாலாஜிகல் ஹைஸ்கூல் ஹெட் மாஸ்டர் ஸ்ரீமான் கே. ரங்கசாமி ஐயங்கார் பி. எ. பி. எல். எல். டி. அறிவித்ததும், ஆழ்வார் திருநகர் கோயில் நிர்வாஹ ஆபீஸர் ஸ்ரீமான் எல். ஆர். குருசாமி நாயுடு 5-12*40-ல் யாத்ரா கோஷ்டியில் ஹரிஜனங்களுண்டா எனக் கேட்டிருந்தார். 7—12—40-ல் ஹெட் மாஸ்டரிடமிருந்து ஹரிஜனப் பையன்கள் இல்லையென்ற தகவல் வந்ததன்மேல் வரவேற்பதாய் ஏற்றுக்கொண்டதாய் தெரிகிறது. இந்த சொஸைட்டியார் திருநகரிக் கோயிலுக்குள்ச் செல்லுகையில் அவர்களுடன் வேறெவர்களும் நுழையாமல் சனுதனிகள் கோபுரவாசலிலிருந்து கவனித்து யாத்ரா மாணவர்களை வரிசையாக அனுப்பிவைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ந. வி. நி.

ஸ்ரீ ராதாகல்யாண மஹோத்ஸவம்.
நாகூர்.

நாகூரில் மேல அக்கிரஹாரத்தில் து. வீராசாமி அய்யரால் ஸ்தாபிக்கப்பட்டும், ஸ்ரீமத் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யா ஸ்வாமிகள் அவர்கள் அனுக்ரஹமும், பாதுகளியும் பட்டதுமான பஜனை மடத்தில் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ கோபாலகிருஷ்ண பரமாத்மா ஸ்ரீ ராதா தேவியினுடைய விவாஹத்தை பிருந்தாவனத்தில் காந்தர்வ விதியினல் நடத்தப்பட்ட திவ்ய கல்யாண மஹோத்ஸவம் நாளது விக்ரம-ஷு தனுர் மாதம் 10உ ஆரம்பிக்கப்பட்டும் 11உ ஏகாதேசியன்று ஆவுடையார்கோவில் பிர்மஸ்ரீ ஹரிஹர பாகவதர் அவர்களால் பக்த ருக்மாங்கதா சரித்திர கதாகால க்ஷேபமும் 12-உ ஸ்ரீ ராதாகல்யாணமும் வெகு விமர்சையாய் நடத்தப்பட்டும், பிறகு பிராமணசந்தர்ப்பணைகள் நடந்து மாலை பிர்ம்மஸ்ரீ ஹரிஹர பாகவதர் அவர்கள் ஜலதாங்க கச்சேரி நடந்து, ராத்திரி ஸ்ரீ கோபாலகிருஷ்ண பரமாத்மா வீதி பிரதக்ஷணம் விமர்சையாய் யாய் புஷ்பவிமானத்தில் நடந்தும், 13-உ ஆஞ்சநேய உத்ஸவமும் நடந்து, மாலை பிர்மஸ்ரீ காளியாகுடி நடேச சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீமத் ராமாயணம் சீதா கல்யாணம் உபந்யாஸம் நடந்தும், நாகப்பட்டணம் பிர்மஸ்ரீ நடராஜய்யர் அவர்களால் பாட்டுக்கச்சேரியும் ராத்திரி காலம்சென்ற மாங்குடி சிதம்பர பாகவதர் அவர்கள் சிஷ்யர்ரான திருப்பூந்துருத்தி பிரும்மஸ்ரீ T. R. விஸ்வநாத பாகவதர் அவர்களால் வத்ஸலா கல்யாண கதாகாலக்ஷேபம் நடந்தும், 24-உ விடாயாத்தி உத்ஸவம் நடத்தப்பட்டும் ராத்திரி திருவனந்தபுரம் பையன்கள் பாட்டுக்கச்சேரியும் நடந்து உத்ஸவம் பூர்த்தி செய்யப்பட்டது. —— ந-நி.

வர்ணாஸ்ரம சுயராஜ்ய சங்க விசேஷ கூட்டம்
திருவண்ணாமலை

12-உ இரவு 8-30 மணிக்கு விசேஷக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் திருவண்ணாமலையில் ஸ்ரீமான்கள் க. வீ. சொ. வீ. அழகப்பச் செட்டியார், கோவாப் ரேடிவ் பாங் காரியதரிசி சோஷாசல அய்யர், வேட்டவலம் ஜமீன்தார், முதலியவர்களின் நிர்வாகத்தை பெற்ற ஓர் திருவண்ணாமலை தாலூகா வர்ணாஸ்ரம சுயராஜ்ய சங்கம் ஒன்று நிறுவப்பெற்றது. திருவண்ணாமலை மஹா நாட்டில் மதுரை ஸ்ரீ ராஜா கிருஷ்ணனின் தொண்டும், கோவிலூர், ஸ்ரீ கே. எ. ராமஸாமியின் தொண்டும் மிகவும் போற்ற தக்கது.

12—12—40உ இரவு மாகாண வர்ணாஸ்ரம மகா நாட்டிற்கு விஜயம் செய்திருந்த பிரதிநிதி தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், ஸ்திரீ ரத்தினங்களுக்கும் ஓர் விருந்து வைதீக முறையில் எம். கே. நாராயணஸாமி அய்யரால் நடத்தப்பட்டது.

ஒ. நி.

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியா மருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்

பார்வதி=கல்யாணம்

(எஸ். கே. விச்வேச்வர சாஸ்திரிகள் மாஜி ஸ்கூல் இன்ஸ்பெக்டர்)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஏனப்பா துக்கம்? என்று சுந்தரர் சங்கரரைக்கேட்க, எப்படி இப்பெண்ணை வளர்த்து மனுவாக்கி ஒருவனிடம் ஒப்புவித்து நல்ல பெயர் எடுப்பேன் என்ற கவலைதான், என் துக்கத்திற்குக் காரணம் என்று சங்கரர் விடையளித்தார்.

சுந்தரய்யர் மனதிற்கு "இனியார்தங்நெஞ்சத்து நோயுரைப்ப அந்நோய் தணியாத உள்ளம் உடையார்...........வாழ்வின் வரைபாய்தல் நன்று" என்ற நாலடியார்ச் செய்யுள் ஞாபகம்வர, சரி இதற்கு நீ இப்போது முதல் ஏன் விசாரப்படவேண்டும்? நாமொன்று செய்யலாம்: உன் குழந்தையை என்னிடம் கொடு: என் குழந்தையை உன்னிடம் விடுகிறேன்: வளர்த்துக் கொண்டு வருவோம்: போகப்போகப் பார்ப்போம் அதில் ஏற்படும் கஷ்டநிஷ்டூரங்களை: பெண் என்ற விசாரத்தைக்கொஞ்ச காலம் கட்டி வைத்துப்பார்; ஒருவேளை துக்கம் குறைகிறதோ பார்ப்போம் என்றார் சுந்தரர்: அதற்குச்சங்கர சாஸ்திரிகள் உன்னிஷ்டம் அப்பா: எல்லாம் உன்னுடையதே என்றார். இவைகளை எல்லாம் மூலையில் இருந்த பால்காரி கேட்டுக்கொண்டிருந்தாள். சுந்தரய்யர். பால்காரியை இங்கே வா என்று கூப்பிடவே, அவளும் என் எஜமானே என்று சற்று கிட்ட வந்து நின்றாள்: சுந்தரய்யர்:— குழந்தை சௌக்கியமாய் இருக்கா? என அவள் ஆமாம் சுவாமி என்றாள். சுந்தரய்யர் பால்காரி கையில் இந்தா என்றுசொல்லி இரண்டு ரூபாயை (இது அவளுக்கு வாய்ப்பூட்டாய் இருக்கட்டும் என்ற எண்ணத்துடன்) ப்போட்டு, இங்கு நடப்பதெல்லாம் ரகஸ்யமாய் இருக்கட்டும் என்றார். அவள் பெரிய இடத்துப் பேச்சு, எங்களுக்கேன் சுவாமி என்று சொல்லிப்போனாள்?

"இஷ்டஜனஸம்விபக்தம்கில துக்கம் ஸஹ்ய வேதனம் பவதி" என்றபடியும் சொல்லப்பட்டிருக்கிறதும்,

மேல்நாட்டுப்பெரியார் ஒருவர் "Friendship improves happiness and abates misery, by the doubling of our joy and dividing of our grief" என்று கூறியுள்ளார். ஸ்னேகம் சந்தோஷவிர்த்தி: துக்க சமனம் உண்டாக்கும் என்பதை இவர்களிடம் காணலாம்.

சுந்தரய்யர் வீட்டுக்கு வந்து, லட்சுமி? நம் குழந்தைக்குப் பேர்வைக்க என் தோழன் சங்கரனைக்கேட்டேன். 'கல்யாணம்' என்று வைக்கலாமா? என்று யோசனை சொன்னான். சரி என்று ஒப்புக்கொண்டேன். தன் பெண்ணுக்குப்பார்வதி, என்று பெயர் வைக்கப்போகிறான், எனவே, சரி அப்படியே செய்யுங்கள் என்றாள் லட்சுமி. தன் குழந்தை பெண் கட்டையாயிருக்கே எப்படி வளர்த்துச் சரியாய் முன்னுக்குக் கொண்டுவந்து, ஒருவனிடம் ஒப்புவிக்கப் போகிறேன் என்று இப்போ முதல் துக்கப் படுகிறான்: அவன் படும்துக்கம் எனக்கே சகிக்கமுடியவில்லை. அதற்காக நான் என்ன செய்ய யோசித்திருக்கிறேன் தெரியுமா? என் பிள்ளையை நீ வள, உன் பெண்ணை நான் வளர்க்கிறேன் என்று சொல்லி வந்தேன்: உன் மனசென்ன என்றார்? அதற்கு லட்சுமி சற்று அசம்மத முகம் காட்டவே இப்படி நான் செய்வதும் ஒரு நல்லத்துக்காகத்தாண்டி: உலகம் கெடக்கிறகெடே, உனக்கு ஒண்ணும் தெரியவில்லையே! "குடைக்கால் போல் கீழ் மேலாய் நிற்கும் உலகு" என்று சொல்லியிருப்பது இப்போது பொருந்தும். படிக்கவைத்தால், நம்ம குழந்தை 'கல்யாணம்' கலெக்டர் பிள்ளையென்று, தானே மமதையடைந்தாலும் போச்சு: அல்லது தெருப்பிள்ளைகள், மற்ற தோழர்கள், அவனை அப்படி கிளப்பி விட்டாலும் சரி. [பணக்காரப் பிள்ளைகள் படிக்கிற லட்சணம் தெரிந்திருக்கே: அது மாத்திரமா? ஏழைப்பிள்ளைகள்கூடப் படிப்பதே இல்லை: படிப்புத்தவிர பாக்கியில் புத்தியைச்செலுத்தும் காலமாய்ப்போச்சு இப்போ] அப்படி கர்வங்கொண்டு படிப்பை நம்ம பையன் அசட்டை செய்யாமல் இருக்க இது ஒரு நல்ல வழி, கல்யாணம், தான் ஒருசாதாரண நல்ல மனுஷ்யரின் பிள்ளையே தவிர, வேறு ஒரு பண ஐசத்தியும் உள்ளவன் அல்ல என்ற எண்ணங்கொண்டு படிப்பானேயானால், ஒரு சமயம் நன்றாய்ப்படிக்கலாம்.

அதோடு சங்கர சாஸ்திரிகளிடம் இருந்தால் ஒழுக்கத்தில் ஓங்குவான். நான் ஸர்க்கூட் போகிறவனல்லவா? ஆகையால் தினசரி கவனிக்கமுடியாது. படிக்கிற குழந்தைகளுக்கு எப்போதும் புருஷஹஸ்து வேண்டும்: தாயார் என்ன செய்வாள்? வாய்க்கு வேணுங்கிறதைத்தான் கொடுப்பாள்; "தாயோடு அறுசுவை போம் தந்தையோடு கல்விபோம்," என்ற ஔவையார் வாக்கின்படி தான் நடக்கும்: உன் பிள்ளை கிட்டத்தானே இருக்கு: வேண்டுமானால் பால்காரியை,க்கொண்டு வா, என்று ஆள் விட்டால் உடனே வருகிறாள்: மேலும் அந்த வீட்டில் பெண்கள் ஒருவரும் இல்லாததால், பால்காரி அனேகமாய் இங்கேயே பொழுதைப்போக்கலாம். நாம் கவனித்துக் கொள்ளலாம்: கால் முளைத்த பிறகு குழந்தைகள் அங்கும் இங்குமாய்க்கிடக்கும். அதிலே இன்னொண்ணு: பெண் குழந்தை அவனிடமிருந்தால், அவன் அக்குழந்தையைப் படிக்கவைக்க, போகப்போக சங்கீதம் முதலியவை சொல்லிவைக்கத் தகுந்த, வாத்தியாரை வீட்டிலே வைத்து ஏற்பாடு செய்ய, (அவன் பெரிய சாஸ்திரக்ஞன் ஆதலால்) சனாதன தர்மத்தை ஒட்டித் துணிந்து செய்ய முன் வரமாட்டான்: அதற்குத் தக்க இயல்பும் அவனிடம் இல்லை. முக்யமாய் குடும்ப காரியங்கள் பழகுவதாயிருந்தால் கோலம் போட, பாத்திரங்கள் சுத்திசெய்ய சமயல் வேலை, தன் தேகத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ளல், பெண்களுக்கு வேண்டிய அச்சம், நாணம், மடமை முதலியன, ஒரு பெண் கீழ் இருந்து வந்தால் தான் நன்றாகும். அதிலும் உன் கீழ் இருந்துவந்தால் எல்லாம் நன்றாய் விடும். புக்காத்துக்குப் போய் குடித்தனம் செய்ய வேண்டியதல்லவா? படிப்பு, சங்கீதம், மேல்நாட்டைப் பார்த்து, இங்கேயும் கொஞ்சம் கொஞ்சமாய் வருகிறது. நீ வாக்கப்பட்டபோது இருந்த நாளல்ல இது. பிள்ளை வீட்டுக்காராளும் பெண்ணுக்கு என்னென்ன யோக்யதை இருக்கென்று கவனிக்கிறார்கள். நான் உத்யோகஸ்தனாதலால், படிக்கவைத்தால் என்னை ஒருவரும் குற்றஞ் சொல்லார் பகிரங்கமாய்: அவன் என்றால் லேசில் விடார்கள். கடைசியாய்ச் சொல்றேன். சங்கரனும் ஆதிமுதல் என் இணைப்பிரியாத்தோழனென்று உனக்குத்தெரியுமே. இப்போ யோசித்துப்பார் என்றார். (தொடரும்)

Books By

Sri K. S. Ramasami Sastrigal, B.A., B.L.

		Rs.	A.	P
1.	Kalidasa's Heroes	0	6	0.
2.	The science of the soul	1	8	0
3.	Manu, the friend of Man	0	8	0
4.	Sandilya Bakthi Sutras	0	4	0
5.	The Gospel of Gita	0	3	0
6.	The future of Brahmin	0	2	0
7.	The Gita ideal of devotion	0	4	0
8.	நாரத பக்தி சூத்ரம்	0	2	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopladesikachariar, and S. Kalyanasundaram.